2. அறிவிப்பு

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)-ன் கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களை இப் பேரவையின் மூன்றாவது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன்:

1. திரு. பி. ஆர். சுந்தரம்
2. திரு. அ. பாப்பா சுந்தரம்
3. திரு. ப. இராஜரெத்தினம்
4. திரு. எம். ஏ. ஹக்கீம்
5. திரு. செ. கு. தமிழரசன்
6. திரு. லா. சந்தானம்

3. அறிக்கை அளித்தல்

அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2001-2002-ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் முதலாவது மற்றும் இரண்டாவது அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.